Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 3·50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வூ புரட்டாதி மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை (30 - 09 - 1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 10 ஓசை 225

## கப்பல் உணவில் 80 வீதம் விநியோகிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு கொண்டுவரப்படும் உணவுப்பொருட்களில் எண்பது வீதமான பொருட்கள் மக்களுக்கு பங்கீட்டுக்காக ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீதி 20 வீத உணவுப்பொருட்கள் கப்பலில் இருந்து இறக்கி ஒதுக்கி வைக்கப்பட்டு (4ஆம் பக்கம் பார்க்க)

அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறைபற்றி

# யாழ். அரச அதிபரிடம் அதிகாரிகள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை நடவடிக்கையில் தமது திணைக்களங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பற்றியும், அவற்றின் அத்தியாவசியம் பற்றியும் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பெண்கள் பாடசாலையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வதிகாரிகள் இவ்விடயங்கள் பற்றி அரச அதிபரிடம் கூறியுள்ளனர்.

இதில் ஒவ்வொரு திணைக்களங்களும் தமது ஊழியர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு இவ்வளவு காலமும் வழங்க வேண்டிய சம்பளத் தொகை பற்றியும், ஒரு மாதத்திற்கு எவ்வளவு பணம் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் தமது ஊழியர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளமாக வழங்க தேவை எனவும் அந்த திணைக்களத் தலைவர்கள் தெரிவித்தனர்.

**மண்ணெண்ணெய்**

கிளிநொச்சி மாவட்டம் வரை கிடைக்கும் மண்ணெண்ணெயை யாழ்மாவட்ட மக்களின் தேவையை கருத்தில் கொண்டு யாழ். குடாநாட்டிற்குள்ளும் கொண்டு வருவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## ரமேஸ் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் பகுதியில் நேற்று முன்தினம் அல்லைப் பிட்டியில் இருந்து பின்வாங்கிய இராணுவத்தினரை வழி மறித்து தாக்குதல் நடத்திய (4 ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் கரை ஒதுங்கியது

(விசேடநிருபர்)

நேற்று முன்தினம் காலை கொழும்புத்துறை துண்டிக் கடலில் அழுகிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

கறுப்புநிற உள்ளங்கியுடன் காணப்பட்ட மேற்படி சடலம் கடந்த 17 ஆம் திகதி (4 ஆம் பக்சம் பார்க்க)

## நினைவுப் பந்தல்

(விசேட நிருபர்)

தியாகதீபம் திலீபனின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். கோட்டை அமைப்பில் நினைவுப்பந்தல் ஒன்றை இளைஞர்கள் சிலர் அமைத்துள்ளனர்.


யாழ். நாச்சிமார் கோவிலடி கேசாவில் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக இப் பந்தல் இப்பொழுதும் கம்பீரமாக காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. (21)

## சீருடையுடன் கடமைக்குவரவும்

(மானிப்பாய்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப்பிரிவில் கடமை புரியும் மேற்பார்வையாளர்கள் உட்பட சகல சிற்றூழியர்களும் சீருடையுடன் கடமைக்குவரும்படி கேட்கப்பட்டுள்ளனர்

இந்த நடைமுறையை நாளைமுதல் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஊழியர்கள் தமது அடையாள அட்டைகளையும் அணிந்துவர வேண்டும் எனவும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)



யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் கோட்டையில் கடந்த மாதம் ஐந்தாம் திகதி வீரமரணமடைந்த போராளிகளின் பூதவுடல்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

படம்: பிரதீப்

## உயிருக்குஉத்தரவாதம்இல்லை; நகருக்குள் செல்ல முடியாது

(வவுனியா)

வவுனியா அரச அதிபரினால் தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர முடியாத நிலையில் தாம் நகரப்பகுதி சென்று கச்சேரியில் கையெழுத்திடுவதில்லைஎன்று கிராம சேவையாளர்கள் கூறினார்கள்.

**அண்மையில்சாஸ்திரிகூழாங்குளம் கிராமசேவையாளர்** மர்மமாக மறைந்ததும் இது பற்றி அரச அதிபரிடம் கேட்கப்பட்டபோது இதுபற்றி தம்மால் அறியமுடியவில்லை என்று கூறியிருந்தாராம்.

இந்த நிலையில் கச்சேரி செல்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று கிராமசேவையா (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொடர்ந்தும் தமிழர் காணாமற் போகின்றனர்

வவுனியா நகரப்பகுதிக்குச் சென்ற கோழியகுளத்தைச் சேர்ந்த கனகசபை தர்மராஜா சிலதினங்களுக்கு முன்னர் காணாமல் போய்விட்டார்.

இவர் பெருந்தொகையான பணத்தைக் கொண்டு சென்றார் என்றும் இராணுவ உளவாளிகளே இவரைக்கடத்தியிருக்க வேண்டும் என்றும் அறியப்படுகிறது. (தி)

## அகதி முகாமில் வயிற்றோட்டத்திற்கு எட்டுக்குழந்தைகள் பலி!

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்களில் கடந்தவாரத்தில் மட்டும் 8 குழந்தைகள் வயிற்றோட்டத்தால் மரணமடைந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் அங்குள்ள தமிழர் அகதிமுகாம்களில் பெரும் அவலநிலை நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில் போதிய உணவு கிடைக்கப்பெறுவதில்லை எனவும், சுகாதார, மருத்துவ வசதிகள் அறவே அற்றநிலை நிலவுவதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன. அம் முகாம்களில் நோயும், (4 ஆம் பக்கம் பார்க்க)

அகதிகளுக்கான முதலுதவிப் பொருட்களை

## பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் வழங்குவார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்களுக்குத் தேவையான முதலுதவிச் சிகிச்சைக்கான மருந்துப் பொருட்களை இந்த வாரம் முதல் அவ்வப் பகுதி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளே விநியோகம் செய்வர்.

இதற்குத் தேவையான மருந்துப் பொருட்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க உள்ளது.

இதுவரை காலமும் இந்த அகதி முகாம்களுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகவே வழங்கப்பட்டு வந்துள்ளது.

ஆனால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அகதி முகாம்களுக்கான நடமாடும் முதலுதவிச் சேவை தொடர்ந்து நடாத்தப்படும் எனவும் தெரிகிறது. (க)

## யாழ். கோட்டையில் இருந்து மேலும் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைஇராணுவ முகாமை கடந்தபுதன்கிழமை விடுதலைப்புலிகள் கைப்பற்றியபின் அங்கு மீட்புவேலையில் ஈடுபட்டுவரும் விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் மேலும் பல ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

40 எம். எம். 203 பிஸ்டல் (டொங்கான்) மோட்டார் (4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**மலிவு விற்பனை**

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். 1989, 1990 இல் மீரா வெளியீடுகளாக வெளிவந்த நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/ ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். (R. 675)

**வங்கி ஊழியருக்கு அழைப்பு**

(கிளிநொச்சி)

இலங்கை வங்கியின் கிளிநொச்சிக்கிளை மீண்டும் இயங்க இருக்கிறது. அதற்காக வங்கியில் கடமை புரியும் சகல ஊழியர்களையும் கிளிநொச்சி வங்கியில் 1-10-90 அன்று சமுகம்தருமாறு யாழ்/கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் கேட்டுக்கொள்கிறார்.

**தவறியசைக்கிளை பெறலாம்**

(பூநகரி)

கேரதீவு, சங்குப்பிட்டித் துறையில் உள்ள கேரதீவுத் துறைகடலில் கடந்த மாதம் படகு ஒன்று கவிழ்ந்ததில் சைக்கிள் கடலில் மூழ்கியது. இந்தச் சைக்கிளை மீனவர்கள் மீட்டெடுத்து, அறுகுவெளி செயலகத்தில் ஒப்படைத்துள்ளனர். துவிச்சக்கர வண்டி உரிமையாளர் ஆதாரம் காட்டி, பெற்றுக் கொள்ளலாம். (71)


# வன்னிமாவட்டத்தின் இன்றைய நிலை (பகுதி 4)

## ஸ்ரீலங்கா அரசபடையினால் சேதமடைந்த அரச கட்டிடங்களின் விபரங்கள்

| இல. | விபரம் | சம்பவ இடம் | சம்பவ திகதி |
|---|---|---|---|
| 1. | மாவட்ட உணவு களஞ்சியம் | பரந்தன் | 6.6.90 |
| 2. | மாவட்ட செயலகம் | கிளிநொச்சி | 14.6.90 |
| 3. | விற்பனை திணைக்களம் | ,, | 14 6 90 |
| 4. | பிரதேசசபை | ,, | 14.6.90 |
| 5. | பொதுநூலகம் | ,, | 14.6.90 |
| 6. | தபாலகம் | ,, | 14.6.90 |
| 7. | நீதி மன்றம் | ,, | 14.6 90 |
| 8. | சமநலசேவை நிலையம் | ,, | 14.6.90 |
| 9. | நெல் சந்தைப்படுத்தும் சபை | ,, | 14.6.90 |
| 10. | விவசாய இலாகா | ,, | 14.6.90 |
| 11. | உள்ளூராட்சித் திணைக்களம் | ,, | 14 6.90 |
| 12 | நீர்ப்பாசன திணைக்களம் | ,, | ,, |
| 13. | பொலிஸ் நிலையம் | ,, | ,, |
| 14. | இராணுவ முகாம் | ,, | ,, |
| 15. | நீர் வழங்கு சபை | ,, | ,, |
| 16. | சென் திரேசா பாடசாலை | ,, | ,, |
| 17. | தென்னிந்திய திருச்சபைதேவாலயம் | ,, | ,, |
| 18. | பெந்தகோஸ் தேவாலயம் | ,, | ,, |
| 19. | பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | மாங்குளம் | 18.6.90 |
| 20. | பாடசாலை விடுதிகள் | மாங்குளம் | ,, |
| 21. | மீன்பிடி சங்கம் | மாங்குளம் | ,, |
| 22. | உதவி அரசாங்க அதிபர் பணிமனை | கிளிநொச்சி | 20.6 90 |
| 23. | கனிஷ்ட மகாவித்தியாலயம் | ,, | ,, |
| 24. | அரச வைத்தியசாலை | ,, | ,, |
| 25. | மில்க்கோ பால் தொழிற்சாலை | ,, | 22.6.90 |
| 26. | ப. பொ. உ. கூ- சங்கம் | ,, | 28.6 90 |
| 27. | பாடசாலை | ,, | ,, |
| 28. | பொதுச்சந்தை, மீன், இறைச்சிக்கடை | ,, | 30.6.90 |
| 29. | பொதுமடம் | முறிகண்டி | 12.7.90 |
| 30. | பாடசாலை | முரசுமோட்டை | 21.7.90 |
| 31. | கிராம அபிவிருத்தி சங்கம் | கணேசபுரம் | 27.7.90 |
| 32. | அரச மிருக வைத்தியசாலை | ,, | 31.7.90 |
| 33. | ஓமந்தை நூல்நிலையம் | ஓமந்தை | 26.6 90 |
| 34. | கமநல சேவை நிலைய கட்டடம் | | 3.6.90 |
| 35. | பாடசாலை | | 4.6.90 |
| 36. | அரச அதிபர் காரியாலயம் | | 5.6.90 |
| 37. | அரச அதிபர் பணிமனை | முல்லைத்தீவு | 30.7.90 |
| 38. | போக்குவரத்து சாலை | ,, | ,, |
| 39 | ப. நோ. கூ. சங்கம் | ,, | 24.7.90 |
| 40. | பொது மருத்துவ மனை | ,' | 1.8.90 |
| 41. | மருத்துவ மனை விடுதி | ,, | ,, |

(தொடரும்)

# வெளிமாவட்ட மாணவர் ஊர் திரும்புவதில் அச்சம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட மாணவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிகிறது. வவுனியா வரையில் சுமுகமாகப் பயணத்தைத் தொடரக்கூடிய வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் வவுனியாவிற்கு அப்பால் என்ன நேருமோ என அச்சம் கொண்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இதற்காக துணைவேந்தரின் அனுசரணையை மாணவர்கள் நாடியுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் வவுனியாவுக்கு அப்பால் செல்லும் மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக துணைவேந்தர் பேசியதாகவும், அவர்கள் உரிய கவனம் செலுத்தவில்லை என்றும் அறியப்படுகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரை 28-9-90 அன்று சந்தித்த மாணவர் தூதுக்குழுவிடம் 'காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க மட்டுமே தங்களுக்கு உரிமை உண்டு' என்ற தொனியில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பேசியதாகத் தெரியவருகிறது.

தற்போது வவுனியாவிற்கு அப்பால் செல்லும் மாணவர்கள் தமது பாதுகாப்பை எப்படி உறுதி செய்வது எனத் தெரியாத இக்கட்டான நிலையில் இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.


அது ஒரு காலம் -
இறந்துவிட்ட ஒரு காலம்
எங்கள் மண்ணில்......
எழிலார்த்த வீதிகளில்
'ஷெல்' உதிர்ந்து வெடித்து
சிதறி வீழ்ந்த உயிர்த்துளிகள்
உறைந்த உதிரத்தின்
கறை நிறைந்த படிமங்கள்
உடைந்த நகரத்தில்
இடிபாட்டின் சின்னங்கள்

அது ஒரு காலம்—
இறந்துவிட்ட ஒருகாலம்......

நேற்று 'கோட்டை'
செத்துப் போனது......
நினைவை மட்டும்
விட்டுப் பறந்தவர்...
நிம்மதி மூச்சை
விடவே வைத்தனர்

புலிக்கொடி பறக்கும்
வேளை, இன்று
அடிமையின் சின்னம்
அடி பணிந்ததுவே
வேங்கைகள் வாழ்க
வேங்கைகள் வாழ்க......
எங்கள் தாயகச் சுதந்திரம்
ஒளிர்க



சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 15, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B. 1438)

## சிந்தனைக்கு

தேளுக்கு மணியம் கொடுத்தால், நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டும்.

— தமிழ்ப்பழமொழி


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 30-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## சிங்கள மயமாக்கல்

திருமலையில் கடமைக்குச் சமுகம் தரவில்லை என்று காரணம் காட்டி 500 தமிழ் ஊழியர்களுக்கு பதவி நீக்கக் கடிதங்களை சிறிலங்கா அரசாங்கம் அனுப்பியுள்ளது.

அதாவது திருமலை மாவட்டத்தில் இருந்து தமிழரை அடித்துத் துரத்தி விட்டுவி டு, அவர்கள் கடமைக்கு வரவில்லை என பதவி நீக்கமும் செய்துள்ளது சிறிலங்கா அரசாங்கம். இதேபோன்று அம்பாறை மாவட்டத்திலும் சிறிலங்கா அரசாங்கம் செயற்படத் தொடங்கியுள்ளது.

இன்று கிழக்கில் குறிப்பாக திருமலை, அம்பாறை மாவட்டங்களின் எப்பகுதியிலும் தமிழரின் உயிருக்கும், உடைமைக்கும் எந்தவித பாதுகாப்பும் உத்தரவாதமும் கிடையாது. வீட்டில் இருந்தாலும் சரி, 'தடுப்பு முகாமில்' இருந்தாலும் சரி தமிழர் இழுத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றார்கள். பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகின்றார்கள்.

இவற்றிற்கு சிறிலங்கா ஆயுதப்படையும், முஸ்லிம் சமூக விரோதக் கும்பலுமே காரணமாக உள்ளது. அதாவது சிறிலங்கா அரசாங்கத்தில் பயிற்சியும், ஆயுதமும் வழங்கப்பட்டுள்ளதோடு இன்றும் சிறிலங்கா அரசின் உத்தியோகபூர்வ ஆயுதம் தாங்கியவர்களாகும்.

இந்நிலையில் ஊழியர்கள் எவ்வாறு கடமைக்குச் செல்ல முடியும்? ஆனால் இவ்விடயம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தெரியாமல் இல்லை. இது சிறிலங்கா அரசாங்கத்தின் சதித் திட்டமாகும்.

இம்முறை சண்டை தொடங்கியதில் இருந்து திட்டமிட்டு விரைவில் திருமலை, அம்பாறை மாவட்டங்களில் இருந்து தமிழரை முழுமையாக வெளியேற்றுவதை நோக்கமாகக்கொண்டே அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. இதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தும் அதேவேளை முஸ்லிம் ஊர்காவற்படையையும் அரசாங்கம் பயன்படுத்துகின்றது. இதனால் இரு விடயங்களை அரசாங்கம் சாதிக்கப் பார்க்கின்றது.

ஒன்று தமிழரை இப்பகுதிகளில் இருந்து விரட்டுவது, இரண்டு தமிழ் முஸ்லிம் உறவைப் பலவீனப்படுத்துவது.

ஒருபுறத்தில் திட்டமிட்டு அம்மாவட்டங்களில் இருந்து தமிழரை வெளியேற்றும் சிறிலங்கா அரசாங்கம் மறுபுறத்தில் வெளியேறும் தமிழரையே காரணம் காட்டி நிர்வாகத்தை சிங்கள மயமாக்கும் திட்டத்தையும் விரைவுபடுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் கிழக்கில் விவசாய சிங்களக் குடியேற்றங்களால் பெருமளவு நிலப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டது. அரச கைத்தொழில்களில் வழங்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான வேலை வாய்ப்புக்கள் மூலமும் (எடுத்துக்காட்டாக பீறிமா ஆலையில்) அவற்றிலும் பெரும்பான்மை பலமும், கிழக்கில் சனத்தொகை உயர்வும் பெற்றுவிட்டது. அதேபோன்றே அரச நிர்வாகத்திலும் உயர் பதவிகளை முதலிலேயே சிங்களவர்கள் பெற்றுவிட்டார்கள்.

ஆனால் தற்பொழுது தமிழருக்கு அனுப்பப்பட்ட பதவி நீக்கக் கடிதங்கள் மூலம் முழுமையாக சிங்கள நிர்வாகத்தை விஸ்தரிக்கத்திட்டமிட்டுள்ளார்கள். அதாவது பதவி நீக்கம் செய்யப்பட்ட தமிழருக்குப் பதில் சிங்களவரை நியமித்து இக் காரியத்தைச் சாதிக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

பேச்சளவில் இனவிகிதாசார வேலை வாய்ப்பு, குடியேற்றம் எனப் பறை சாற்றிவரும் தற்போதைய சிறிலங்கா அரசாங்கம் வேலைவாய்ப்பு, குடியேற்றம் என்பனவற்றில் இன்றுள்ள சிறிய அளவையும் தட்டிப் பறிக்கின்றது. அதாவது இனஒடுக்கு முறைக்காக மேலும் ஒரு படி சென்றுள்ளது.

## இட ஒதுக்கீட்டு நெருக்கடி; அரசியற் தலைவர்கள் கூட்டம்

(டெல்கி)

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புகளில் கூடுதலான இடத்தை ஒதுக்கும் அரசின் திட்டத்தை எதிர்த்து ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக அரசியல் தலைவர்கள் டில்லியில் பல கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் திட்டத்தால் எழுந்த வன்முறை ஆர்ப்பாட்டங்களில் 50 பேர் வரை கொல்லப்பட்டனர். ஆளும் ஜனதா தள கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்றஉறுப்பினர்கள், மாநில முதல்வர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

### கரும்புலி மில்லரின் தாக்குதல்

# இராணுவத் தீர்வு சாத்தியப்படாது என்பதை அரசிற்கு உணர்த்தியது

(நேற்றைய தொடர்ச்சி)

**யாழ். கோட்டை**

எமது சொல்லாடல் மண்டைதீவுக்கும் யாழ். கோட்டைக்கும் திரும்பியது. கடந்த யுத்தத்தில் யாழ். கோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவத்துக்கு விநியோகம் தடங்கல் இல்லாமல் நடந்துகொண்டிருந்தது. 1984இல் நாம் மண்டைதீவு, ஊர்காவற்றுறை உட்படப் பல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முகாம்களை அமைத்திருந்தோம். பொருட்களைப் படகிலும், ஹெலியிலும் கொண்டுவந்து மண்டைதீவில் தரையிறக்கி, பண்ணைத் தாம் போதிவழியாக கோட்டைக்கு எடுத்துச் செல்வது புலிகளுக்குத் தெரிந்த சம்பவமாகும். யாழ். பொலிஸ் தலைமைச் செயலகத்திலும் ஒருமுகாமை அமைத்திருந்தோம். பண்ணை வழியாக வரும் இராணுவ வாகனத் தொடர்களின் மேல் தாக்குதல் மேற்கொள்ளும் வகையில் மோட்டார் பூட்டி ஷெல் அடிப்பதற்கு பொலிஸ் நிலைய முகாம் தடையாக விருந்தது. இம்முறை புலிகள் தந்திரமாகநடந்துள்ளார்கள். பேச்சுவார்த்தை என்ற பெயரில் பாதுகாப்பு அமைச்சைக்கொண்டு மண்டைதீவு, யாழ். பொலிஸ் தலைமைச் செயலக முகாம்களை அகற்றியுள்ளார்கள். பருத்தித்துறை, தொண்டைமானாறு, பாவற்குளம், வெலிஓயா முகாம்களும், வேறு முக்கிய முகாம்களும் மூடப்பட்டன. இம் முகாம்கள் பலவற்றில் 1983 இல் பயிற்சிபெற்ற முக்கிய இராணுவப் பிரிவுகள் இருந்தன. இப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் யுத்தத்தில் வல்லவர்கள். சிறிலங்காப் படை 1000க்கும் குறைவான சிப்பாய்களுடன், ஒரு சட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. எஸ்.ரி எவ் மட்டக்களப்பைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது எப்படியோ, அப்படி இந்திய அமைதிப் படை 8,000 துருப்புக்களைக் கொண்டு மட்டக்களப்பை சமமான கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியவில்லை.

வடமராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷன் நாம் தொடங்குவதற்கு முன்பதாக கிழக்கிலும், வடக்கிலும் ஆனையிறவு வரை சிறிலங்கா இராணுவம் புலிகளை இல்லாமல் செய்திருந்தது. கிழக்கில் எஸ்.ரி.எவ். செயற்பட்டது. வன்னியில் ஆர். டி. எவ். கொமான்டோஸ் பிரிவுகள் அடர்ந்த காடுகளில் புலிகளின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இம்முறைச் சண்டையில் விமானப் படையின் உதவி இல்லாமையால் மூதூரில் பல கொமான்டோக்கள் உயிரிழந்தனர். சமாதானப் பணிகளுக்கு ஹெலிகள் திசை திருப்பப்பட்டதாக நான் காண முடியாது என்பதை புலிகளுக்கும், ஏனையோருக்கும் சந்தேகமின்றித் தெளிவு படுத்துவதே பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் எனது நோக்கமாக இருந்தது.

ஆகவேதான் வடமராட்சியில் 'ஒப்பறேசன் லிபரேஷன்' நடவடிக்கையை மே 87 இல் ஆரம்பித்தோம். இந்தியா தலையிடாது இருந்திருந்தால் நாம் புலிகளை யாழ்ப்பாண நகருக்குள் தள்ளிச் சென்றிருப்போம். இதன் மூலம் சிறிலங்கா அரசுடன் இணக்கமான அரசியல் தீர்வொன்றிற்கு வருவதன் வாயிலாக மட்டுமே அவர்கள் தொடர்ந்தும் வாழமுடியும் என்பதைக் காட்டியிருப்போம்.

> சிறிலங்காவின் முன்னாள் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இலங்கையின் இரு யுத்தங்களை முன்நோக்கியும், பின்நோக்கியும் பார்வையிட்டுத் தமது கருத்துக்களை த ஐலண்ட் பத்திரிகையில் தெரிவிக்கிறார்.

கேள்வியுற்றேன் – இப்படிக் கூறுகிறார் அத்துலத் முதலி

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வடமராட்சி இராணுவ நடவடிக்கை தோல்வி என்று அத்துலத்முதலிகருதுகிறாரா? வடமராட்சியை சிறிலங்காப் படையினர் கைப்பற்றி ஒரு மாத காலத்துக்கும் பிறகு, கரும்புலி அணி ஒன்று நெல்லியடியில் கரந்திருந்து தாக்கி 20 சிறிலங்கா சிப்பாய்களைக் கொன்றது. ஆகவே தான் 1987 இல் சிறிலங்கா அரசு இராணுவத் தீர்வை நிலைநாட்ட முடியாது என்பதை உணர்ந்தது.

**தீர்வு**

மற்றும் பலரைப் போல இந்தப் பிரச்சினையில் நீங்களும் தெளிவு அற்றிருப்பது போல்தெரிகிறது. இராணுவத் தீர்வா அல்லது அரசியற் தீர்வா என்பதல்ல இங்குள்ள கேள்வி. ஆயுதப் பலத்தைக் கொண்டு ஈழத்தை நிறுவலாம் என்ற இராணுவத் தீர்வில் புலிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இராணுவ வழியில் செயற்பட்டு இனியும் வெற்றி

**பாராளுமன்றம்**

''நான் அண்மையில் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதைப் போல் ஆயுதப்படையினர் வடக்கிலும், கிழக்கிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் அரசியல்தீர்வு செயலாக்கம் பெறமுடியும்.'' 1987 ஆகஸ்ட் 7 ஆம் திகதி லண்டன எக்னாமிஸ்ட் இதழிலிருந்து மேற்கோள் காட்டிய அமைச்சர் பிரச்சினையின் சிக்கலான தன்மையைக் காட்டினார்.

''இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரக்கூடும் ஏனெனில் ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் கெரில்லாப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் நம்பிக்கை கொண்டிருப்பதோடு இப்போராட்டத்தின் பின்னணியிலுள்ள நியாயமான அபிலாசைகளுக்கு தீர்வு காண்பதற்கான யோசனைகளையும் கொண்டிருந்தனர்.

# பாகிஸ்தானுடன் நட்புறவு வளர்க்க இந்தியா பாடுபடும்

நட்புறவு, நல்லிணக்கம் என்ற அடிப்படையில் பாகிஸ்தானுடன் முழுமையான உறவுகளை வளர்க்கப் இந்தியா பாடுபடும் என்றுஇந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் கூறினார்.

நேற்று மாலை ஐ. நா. பேரவையின் 45 வது கூட்டத் தொடரில் உரையாற்றிய அவர் இந்த இரு அண்டை நாடுகளும் ஒன்று மற்றதன் ஒருமைப்பாட்டிற்கு மதிப்பளித்து நடந்து கொண்டால் நல்ல எதிர்காலம் உள்ளது என்று சொன்னார். மேலும் பேசுகையில் பஞ்சாப்பிலும், ஜம்முவிலும் இடம் பெறும் பயங்கரவாத வன்செயல்களுக்கு ஊக்கம் தரவேண்டாமென பாகிஸ்தானிடம் இந்தியா எவ்வளவோ எடுத்துக் சொல்லியுள்ளது. ஆனாலும் பாகிஸ்தான் அதைப் பொருட்படுத்தவில்லை. பரஸ்பரம் நம்பிக்கையை வளர்க்க இந்தியா முன்வைத்த திட்டத்தையும் பாகிஸ்தான் நிராகரித்து விட்டது என்றார் அவர்.

பாகிஸ்தானின் உள் விவகாரங்களில் தலையிட இந்தியா விரும்பவில்லை என்று குறிப்பிட்ட ஐ. கே. குஜ்ரால், சிந்து, பாலுஸ்தான்மாகாணங்களில் மனிதஉரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவது பற்றி தாம் எதுவும் சொல்லவிரும்பவில்லை என்றார். இந்த மனிதாபிமான மற்றநடவடிக்கைகளை மூடிமறைப்பதற்காகவே பாகிஸ்தானின் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசு கலைக்கப்பட்டதாகவும் கூறினார்.

# ஈராக் - ஈரான் கூட்டு உலகப் போருக்கு வித்திடும்

### — சோவியத் இராணுவத் தளபதி

(வாஷிங்டன்)

ஈராக்கும் ஈரானும் கூட்டணி சேர்ந்து மூன்றாவது உலகப்போர் வெடித்துவிடும் சாத்தியக்கூறுகள் உண்டு என்று சோவியத் தலைமை இராணுவத்தளபதி ஜெனரல் மிக்கெய்ல் கூறியுள்ளார்.

ஒரு சிறிய சம்பவத்தினால் முதல் உலகப்போர் வெடித்தது என்றும், அந்த வாய்ப்பைத் தவிர்க்கவேண்டும் என்றும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அவர் கூறியதாக சொல்லப்படுகின்றது. ஐ.நா.மூலம் தீர்வை ஏற்படுத்தும் சோவியத் ரஷ்யாவின் முயற்சிக்கு அமெரிக்காவும் உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# மக்கள்உரிமையுடன்வாழவேண்டும்!!

# இதுவே திலீபனின் ஆசை - ஞானம்

(வவுனியா)

தியாகி திலீபன் வாழவும், ஆளவும் ஆசைப்பட்டவனல்லன். எமது மக்கள் சகல உரிமைகளுடனும், சொந்த மண்ணில் சுதந்திரத்துடனும் வாழவேண்டும் என்றே அவன் ஆசைப்பட்டான்.

கடந்த26ஆம்திகதி இரணை இலுப்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவுதினக் கூட்டத்தில் பேசும்போது, விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் திரு. ஞானம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது,

திலீபன் ஒப்பற்ற தலைவனுடன் இணைந்து இலட்சியம் நிறைந்தவீரத்துடன் மக்களைத்திரட்டிஎமது சுதந்திரத்தைப்பெற திட்டமிட்டான்.

40 வருடகால அடிமை வாழ்வுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற நோக்குடன் போராட்டத்தில் இணைந்தான்,

நாம் எமது வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தசமயம், எமதுபோராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்குடன் இந்திய - இலங்கை என்னும் ஒப்பந்தம் செய்யப்பட்டு, இந்தியப்படை இங்கு அனுப்பப்பட்டது. அந்த இராணுவத்தால் எமது போராட்டத்தை நசுக்க முடியவில்லை.


உண்மையான விடுதலை உணர்வுடன் தமிழ்மக்கள் போராடுகின்றனர் என்பதை இன்று உலகம் உணர்ந்துவிட்டது.

8 ஆயிரம் சதுரமைல்கள் கொண்ட தமிழ்ப் பிரதேசத்தில் 5ஆயிரம் சதுரமைல் பரப்பிலேயே தமிழ்மக்கள் வாழ்கின்றார்கள். மீதி நிலப்பரப்பில் சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இராணுவ மயப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த நிலையில் பலர் தம்மையும் தமது உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அகதிகளாகச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இங்கு போராடி வீரமரணமடைந்தவர்களைவிட வீணாக இறந்தவர்கள்தான் அதிகம். ஒரு மக்கள் போராட்டத்தின் மூலம் தான் எமது இலட்சியம் நிறைவேறும்.

ஆயுதரீதியாக மட்டுமல்ல; அகிம்சை ரீதியாகவும் எம்மால் போராடமுடியும் என்று நிரூபித்தவன் திலீபன் என்றார்.



யாழ். அரசாங்கஅதிபரும் சில அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகளும் இணைந்துமேற்கொண்ட தீர்மானங்களின்படி எதிர்காலத்தில் கீழ்வரும் பட்டியலின் அடிப்படையிலேயே உணவுப்பொருட்கள் நிவாரணமாக வழங்கப்படும்.

| குடும்ப அங்கத்தவர் | 1 | | 2 | | 3 | | 4 | | 5 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அளவும் பெறுமதியும் | கிலோ | ரூபா | கிலோ | ரூபா | கிலோ | ரூபா | கிலோ | ரூபா | கிலோ | ரூபா |
| அரிசி | 2 | 26 00 | 4 | 52.00 | 5 | 65.00 | 6 | 78.00 | 8 | 104.00 |
| மா | 1 | 14.00 | 2 | 28.50 | 2 1/2 | 35.75 | 3 | 42.75 | 3 | 42.75 |
| சீனி | 1/2 | 15.00 | 1 | 30.00 | 1 | 30.00 | 11/2 | 45.00 | 2 | 60.00 |
| பருப்பு | 1/4 | 10.00 | 1/2 | 20.00 | 1/2 | 20.00 | 3/4 | 30 00 | 1 | 40.00 |
| லக்ஸ்பிறே | — | | — | | 1பை | 40.40 | 1பை | 40.40 | 1பை | 40.40 |
| மீதிப்பெறுமதி | | 18.75 | | 23.50 | | 18 85 | | 15 85 | | 27.85 |
| மொத்தம் | | 84.00 | | 154.00 | | 210.00 | | 252.00 | | 315.00 |

இதில் ஐந்து பேருக்குப் கூடுதலாக உறுப்பினர்கள் கொண்ட குடும்பங்களுக்கும் 315ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களே வழங்கப்படும். (லோ)

## ஊழியர் சமுகம் தரவும்

வவுனியா அரச ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிப்பது பற்றி மீளாய்வு செய்வதற்கான கூட்டமொன்று 1-10-1990 திங்கட்கிழமையன்று காலை 10 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். தவறாது சமுகமளிக்கும்படி வவுனியா கச்சேரி அலுவலரான செ.. பரராசசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

### வடபிராந்திய லொறி போக்கு வரத்துச்சங்கம்

பொதி சுமக்கும் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் ஆலோசனைக் கூட்டம் (30-09-90) இன்று பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல பொதி சுமக்கும் வாகன உரிமையாளர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

(R/678) -தலைவர்.

## மரண அறிவித்தல்

### வில்வலிங்கம் சண்முகவடிவேல்

வல்வெட்டித்துறை பிரபல வியாபாரி காலஞ்சென்ற இ. மு. விஸ்வலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு. விஸ்வலிங்கம் சண்முகவடிவேல் (ஓய்வு பெற்ற S. P. H. I. பருத்தித்துறை) 28-09-90 இல் காலமானார்.

இவர் இரத்தினகாந்தி (Dealer Lanka Filling Station வல்வெட்டித்துறை) யின் அன்புக் கணவரும், இரத்தினகுமார், நந்தகுமார், பிறேம்குமார், உதயகுமார், சிவகுமார், திருமதி அமிர்தகலா, சுபாஸ் சந்திரபோஸ், திருமதி சுவர்ணகலா பொன்னம்பலம், திருமதி சுகிர்தகலா கோபிரட்ணம் ஆகியோரின் தந்தையும், கவிதா, ஜனிதா, ஜலகர், சித்தார்த், அரவிந்த், அனுசா, கௌசிகன், சோபனா, பிரதீபா. துஸ்யந்தினி, பிரியந்தினி, சண்முகப்பிரியன், பிரசாந்தன் ஆகியோரின் பேரனும், திருமதி செல்வரெத்தினம் இரத்தினவடிவேல், M. V. இரத்தினவடிவேல் (முன்னாள் வல்வை நகரபிதா) ஆகியோரின் சகோதரனும், A. திருப்பதி (முன்னாள் வல்வை நகரபிதா), A. மகாலிங்கம், A. ராஜரட்ணம், A. ரட்ணசிங்கம், A. ரட்ணவடிவேல், திருமதி சந்திரகாந்தி சண்முகசுந்தரம், திருமதி புஸ்பகாந்தி மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனரும், சந்திரலேகா, அற்புதமலர், யோகவதி, யோகசறோஜினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-09-90 அன்று மாலை 4 மணியளவில் ஊறணி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

"ஜமுனா"
வல்வெட்டித்துறை.
(R/1677)

தகவல்:
S. ரட்ணகுமார்

### அகதி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வறுமையும் பெரியளவில் காணப்படுவதால் தொற்றுநோய்கள் தோன்றிவரும் அபாயம் உள்ளதாகவும் தெரிகின்றது.

அகதிமுகாம்களில் படுப்பதற்கு இடவசதி இல்லை எனவும், இதனால் மக்கள் வெளிகளிலும், தாழ்வாரங்களிலும், துணிகளாலும், பொலித்தீன் பைகளினாலும் மறைப்புக்களை ஏற்படுத்தி படுத்துக் கொள்கின்றார்கள்.

மேலும் அகதி முகாம்களுக்குப் போக்குவரத்து வசதிகள் கிடையாது எனவும், அகதிகளைப் பராமரிக்க போதிய ஊழியர்கள் இல்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### யாழ் கோட்டையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்கள் 60,எம்.எம் -2,81 எம். எம்-17. பீரங்கிக்குண்டு -6, ஆர்.பி ஜி ஷெல்-4, ஐந்து அங்குல ஷெல்2, ரவைகள் 8,600,ஜே. ஆர். கைக்குண்டு 41, 81 எம். எம். பூஸ்ரர்-350, ஐந்து அங்குல பூஸ்ரர் 25, கண்ணிவெடிகள்-210 என்பன மீட்கப்பட்ட ஆயுதங்கள் ஆகும்.

மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (க)

### உயிருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபரின் கீழ் உள்ள கிராம சேவையாளர்களும், செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபரின் கீழ் உள்ள கிராமசேவையாளர்களும் கச்சேரி செல்வதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். (தி)

### சடலம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யன்று கல்முனைக் கடலில் வைத்து சிறிலங்கா இராணுவத்தால் வள்ளம் ஒன்றுடன் கைது செய்யப்பட்ட பாஷையூரைச் சேர்ந்த மரியதாஸ் இராசகுமார் (20) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவருடன் கூட்டிச் செல்லப்பட்ட சிறுவனும், வள்ளமும் இன்னமும் வந்து சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## மருந்துத் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் தற்போது மருந்துப் பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பெரும்பாலான மருந்துக் கடைகள் மூடப்பட்டிருக்கக் காணப்படுகின்றன. திறந்திருக்கும் ஒரு சில கடைகளிலும் கூட முக்கியமான மருந்துப் பொருட்கள் இருப்பில் இல்லை எனத் தெரிகிறது.

### கப்பல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்கீட்டு முறையில் வழங்கப்படும்போது நிலவும் தட்டுப்பாடுகளைபூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் எனவும் சில அத்தியாவசிய சேவைகள் உயர் அதிகாரிகளாலும் யாழ். அரசாங்க அதிபராலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (லோ)

### யாழ். அரச

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு அனுமதி பெற்றுத்தர வேண்டும் என யாழ்.மாவட்ட பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் கேட்டுள்ளார்.

**முத்திரைகள்**

யாழ். மாவட்ட மக்களின் கடிதப போக்குவரத்தை சரிசெய்ய ஒன்பது லட்சத்துபன்னிரெண்டாயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளை உடன் கொண்டுவர வேண்டி உள்ளது என வடமாகாண தபால் அத்தியட்சகர் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கேட்டு கொண்டுள்ளார்,

**மின்சாரம்**

யாழ். குடாநாட்டிற்குள் மீண்டும் மின்சாரம் கொண்டு வருவதற்கான திருத்தம் செய்ய வேண்டிய உபகரணங்களின் தேவைகள் பற்றி மின்சார அத்தியட்சகர்கள் விபரம் தெரிவித்தனர். இந்த உபகரணங்களை அரசு தர தயங்குமிடத்து சுழற்சிமுறையிலாவது யாழ். மாவட்டத்திற்கு மின் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுமதி பெற்றுத் தரும்படியும் அவர் கேட்டுள்ளார்.

**உரம் கிருமிநாசினி**

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் உள்ள 12000 ஹெக்டேயர் விஸ்தீரணம் கொண்ட நிலத்திற்கு தேவையான உரவகைகள் கிருமிநாசினி வகைகளை இங்கு கொண்டுவந்து விவசாயிகளுக்கு வழங்கும் உரிமையை விவசாய உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கால்நடை உணவு**

இவை அனைத்துடனும் அண்மையில் யாழ். அரசாங்க அதிபர் தங்கிஉள்ள வீட்டிற்கு சென்ற ஒரு பெண்மணி தாம் வைத்திருக்கும் ஆயிரத்திற்கும் அதிகமான கோழிகளுக்கு உணவுத் தட்டுப்பாடு நிலை பற்றி முறையிட்டார். இதனை கருத்தில் கொண்டு கால்நடை உணவு வகைகளை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கும் யாழ். அரசாங்க அதிபர் முன்மொழிந்தார்.

இந்த பொருட்களுக்கான சேவைகள் அனைத்தும் உரிய சிலவழிமுறைகள் மூலம் யாழ். குடாநாட்டிற்குள் கொண்டு வர முன்முயற்சிகள் எடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் அக்கூட்டத்தில் உறுதிகூறினார்.

**மருந்து வகை**

மாதாந்தமாக கொண்டுவர வேண்டிய விசர்நாய்கடி, ஏற்பு மருந்து போன்ற மருந்து வகைகளை கொண்டுவருவதற்கு செய்யவேண்டிய ஏற்பாடுகள் பற்றியும் சுகாதார பகுதி அதிகாரி கூறினார். (லோ)

## கிளிநொச்சி அரச அதிபர் வேண்டுகோள்

கமநல சேவை திணைக்கள உதவி ஆணையாளர் மற்றும் ஏனைய ஊழியர்களையும் கமநல சேவை நிலையத்தைச் சேர்ந்த பெரும்பாக உத்தியோகத்தர்களையும் நாளை 01 10.90 திங்கட் கிழமை கிளிநொச்சி அரசாங்க செயலகத்தில் தவறாது சமுகம் கொடுக்கும்படி கிளிநொச்சி அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கிறார்.

### ரமேஸ்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது ரமேஸ் (இரத்தினம் சத்தியராஜ்) என்ற போராளி வீரமரணமடைந்தார். காரைநகரைச் சேர்ந்த இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.